ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1812/30 - 2013 මැයි 31 වැනි සිකුරාදා - 2013.05.31
*1812/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

*மக்கட்டொகை, புள்ளிவிவரவியல் பதில் பணிப்பாளர் நாயகம் டொன் சந்திரசிறி அபேரத்ன குணவர்த்தன ஆகிய நான், 1944 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆந் தேதிய 9,327 ஆம் இலக்க, 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதிய 9,963 ஆம் இலக்க, 1953 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் தேதிய 10,541 ஆம் இலக்க,1958 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் தேதிய 11,568 ஆம் இலக்க, 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் தேதிய 13,179 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தல் மூலம் அமைச்சரவர்களால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஈ) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகைமை வாய்ந்த அதிகாரி என்ற வகையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழில்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதான 2013 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (2006/07 ஆம் ஆண்டின் அடிப்படையில்) 173.9 ஆகுமென இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

**டி. சி. ஏ. குணவர்த்தன,**
மக்கட்டொகை, புள்ளிவிபரவியல்
பணிப்பாளர் நாயகம்.

மக்கட்டொகை, புள்ளிவிபரவியல் திணைக்களம்,
த.பெ.இல. 563,
கொழும்பு 07,
2013.05.31.

**அட்டவணை**

(1) கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தல், உற்பத்தித் தொழில்.

*06 - 552/1*

---

**கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல் தொழில்களிலுள்ள வேலையாட்களுக்கு வழங்கப்பட வேண்டிய விசேட படிகள்**

*2013 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேற்கூறிய தொழில்களுக்கான வாழ்க்கைப்படிச் சுட்டெண் 173.9 ஆக இருப்பதால் 2013 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் சாதாரண வேலை நாளொன்று தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய விசேட படி பின்வருமாறாகும் என (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk.*எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல் தொழில்கள்**

| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலை நாளொன்றுக்குக் கொடுபட வேண்டிய விசேட படிகள் |
|---|---|
| நாளாந்த வேதனம் பெறும் ஊழியர்கள் | ரூ. ச. |
| தொழிலாளர்கள் - ஆண்/பெண் | 532.33 |

**எம். டீ. சாந்தனி அமரதுங்க,**
பதில் தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 05,
2013.05.31.

06 - 552/2

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

**சுத்திகரிப்புச் சேவைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,**
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 05,
2013.05.31.

**அட்டவணை**

1993 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிய 774/5 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்கு காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ள சுத்திகரிப்பு சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்கள் பின்வரும் பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படும். சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக் குறைந்த திரட்டிய மாதாந்த சம்பள வீதங்கள் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்.

| நிரல் I | நிரல் II<br>சாதாரண வேலை நாள் ஒன்றிற்கான சம்பள வீதம்<br>ரூபா சதம் |
|---|---|
| (அ) இயக்கும் ஆளணி<br>சுத்தப்படுத்துவோர், மலசலகூடத் தொழிலாளர், சுத்திகரிப்போர் அல்லது எப்பெயர் கொண்டு அழைப்பினும் அலுவலகங்களையும் நிறுவனங்களையும் சுத்தப்படுத்தும் செயலிலீடுபடுவோர் | 380.00 |
| (ஆ) மேற்பார்வை ஆளணி<br>இயக்கும் ஆளணிக்குப் பொறுப்பாகவுள்ள ஊழியர்கள், பொறுப்பதிகாரிகள், மாற்றுக் கடமை மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள் | 445.00 |

06 - 552/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.